


ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்
இதழ் 8 சுற்று 2 | JAMALIAN TIMES | பிப்ரவரி, மார்ச், 2024




ஜமால் முகமது கல்லூரி 73வது கல்லூரி நாள் விழா

# உலகில் தனித்துவம் மிக்கவராக திகழ்வது எப்படி?

## தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு பேச்சு




திருச்சி, மார்ச் 14– ஜமால் முகமது கல்லூரியின் (ஆண்கள் பிரிவு) 73 வது கல்லூரி நாள் (College Day) 14–03–2024 அன்று காலை 10.00 மணியளவில் கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடைபெற்றது.

தமிழக அரசின் மேனாள் தலைமைச் செயலர், முனைவர் வெ.இறையன்பு, இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விழா சிறப்புரையாற்றி மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். தேசிய வளர்ச்சியில் மகத்தான பங்களிப்பை வழங்கிய கல்லூரியின் நிறுவனர்களின் நோக்கத்தை செயல்படுத்தி, கல்விப் பணியில் 73 ஆண்டுகளாக ஜமால் முகமது கல்லூரி சாதனை புரிந்து வருகிறது எனப் பாராட்டி தனது உரையைத் துவக்கினார். ஜமால் முகமது கல்லூரி கல்வியுடன்கூடிய ஒருங்கிணைந்த வளர்ச்சியை குறிப்பாக விளையாட்டு, கருத்தரங்கு, சமூகப்பணி போன்றவைகளை வழங்கி வருகிறது. பல்கலைக்கழக தர வரிசைப் பட்டியலில் இடம்பிடித்தோர், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களையும், அதிக அளவில் ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் புத்தகங்களை வெளியிட்ட பேராசிரியர்களையும் பாராட்டி கல்விச் சேவையில் இந்திய அளவில் ஜமால் முகமது கல்லூரி முன்னுதாரணமாகத் திகழ்கிறது என்றார்.

தன்னிடம் உள்ள செல்வங்களைக் குறிப்பாக கல்வியை மற்றவர்களுக்கு வழங்கி வாழ்வதுதான் மகிழ்ச்சி எனக் குறிப்பிட்ட சிறப்பு விருந்தினர், கற்பிக்கும் முறையில் பாடபுத்தகங்களைத் தாண்டி நடப்பு நிகழ்வுகளையும் இணைத்து கற்றுக்கொடுக்க வேண்டும் என ஆசிரியர்களை வலியுறுத்தினார். கற்பித்தல் என்பது மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி அறிந்ததிலிருந்து அறியாதவற்றைத் தெரிந்துகொள்ள முனைவதாகும். மேலும், கல்லூரிக் காலங்களில் மாணவர்கள் கல்லூரியில் உள்ள அனைத்து கட்டமைப்புகளையும் குறிப்பாக நூலகங்களைப் பயன்படுத்தி தங்களின் அனைத்து செயல்களிலும் மகிழ்ச்சியாக ஈடுபட்டால் உலகில் எங்கு சென்றாலும் தனித்துவம் மிக்கவராய்த் திகழ்வர் எனக் குறிப்பிட்டார். ஒவ்வொருவரின் வாழ்விலும் 17 முதல் 26 வயதிற்கு இடைப்பட்ட பத்தாண்டு காலமே வாழ்வைத் தீர்மானிப்பதாக உள்ளது. இக்கால கட்டத்தில் தனித்தன்மை, நேர்மை, செயல்களில் ஆர்வம், முழுமையான ஈடுபாடு, கற்றலில் தெளிவு, நுண்ணுறிவை கண்டறிந்து மேம்படுத்துதல், பரந்துபட்ட வாசிப்பு மற்றும் தொடர் கற்றல் ஆகியவற்றை மேற்கொண்டால் மாணவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் மின்னி மிளிர உதவும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

தஞ்சாவூர் அஞ்சுமண் அறிவகத்தின் நிறுவனர், ஹாஜி. D.M.ஜஃபருல்லாஹ், இக்கல்லூரி நாள் விழாவின் கௌரவ விருந்தினராகப் பங்கேற்றார்.

முன்னதாக, கல்லூரியின் துணை முதல்வர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம், வரவேற்புரையாற்றி, 2023–24 ஆம் கல்வியாண்டின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இவ்விழாவில், கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஜெ. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மேலும், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் முனைவர் அ.ஐ.ஹாஜா மொகைதீன், செல்வி. அ. ஃபமிதா பானு, கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மேனாள் முதல்வர்கள், பெற்றோர்கள், முன்னாள்–இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

வேதியியல் துறை, இணைப்பேராசிரியர் முனைவர் J.சிராஜுதீன் மூத்த அறிவியல் ஆராய்ச்சியாளருக்கான விருதினையும், வணிகவியல் துறை, உதவிப்பேராசிரியர் முனைவர் மாரிமுத்து மூத்த கலை ஆராய்ச்சியாளருக்கான விருதினையும், வேதியியல் துறை, உதவிப்பேராசிரியர் முனைவர் N.முஜாஃபர் கனி இளம் அறிவியல் ஆராய்ச்சியாளருக்கான விருதினையும் பெற்றனர்.

பல்கலைக்கழக அளவில் தர வரிசைப் பட்டியலில் இடம்பிடித்த மாணவர்கள் கல்லூரியில் பணியாற்றி 25 ஆண்டுகள் நிறைவுசெய்த பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் இவ்வாண்டு பணி ஓய்வுபெறும் பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களும் கல்லூரி நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக, கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர் அ.இசாக் அஹமது, நன்றியுரையாற்றினார்.







சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில்

# இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி








# பெண்கள் பிரிவு கல்லூரி நாள் (College Day)




திருச்சி, ஜன.21 – திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் (பெண்கள் பிரிவு) கல்லூரி நாள் (College Day) 07-03-2024 அன்று மாலை 03.00 மணியளவில் கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடைபெற்றது.

சென்னை, B.S.அப்துர் ரஹ்மான் கிரஸன்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணை துணைவேந்தர் (Pro-Vice Chancellor) முனைவர்.N.தாஜுத்தீன் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விழா சிறப்புரையாற்றி மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். அவர் தம் உரையில், “சமுதாயத்தைஎதிர்கொள்ளும்பயணமே வாழ்க்கை” எனக்கூறி தனது உரையைத் துவக்கினார். இயற்கை வளங்களைத் தனது காலத்தில் மட்டுமல்லாமல் பின்வரும் சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் நிலையான வளர்ச்சிக்கு மாணவர்கள் மற்றும் இளம் ஆராய்ச்சியாளர்கள் தங்களின் பங்களிப்பை வழங்கவேண்டும். இந்தியாவில், ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் நோய் மற்றும் இறப்பு அதிகரித்து வருகிறது. ஆகவே மாணவிகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் புதுவகையான நோய்கள் பற்றிய விழிப்புணர்வு வேண்டுமென்றும் நேர்மறையான சிந்தனை, ஈடுபாடு மற்றும் கடின உழைப்பு ஆகியவை மட்டுமே வாழ்வின் வெற்றிக்கு வழிவகுத்து புதுமைகளை உருவாக்க உதவும் என்று அறிவுறுத்தினார்.

துபாய், ப்ளாக் டியுலிப் (Black Tulip), குழுமத்தின் தலைவர் திரு.முகமது கனி முகமது எஹ்யா, இக்கல்லூரி நாள் விழாவின் கௌரவ விருந்தினராகப் பங்கேற்றார்.

முன்னதாக, கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், வரவேற்புரையாற்றி, 2023-24 ஆம் கல்வியாண்டின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இவ்விழாவில், கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஜெ. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மேலும், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம், கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் அ.இசாக் அஹமது, முனைவர் அ.ஜ.ஹாஜா மொகைதீன், கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மேனாள் முதல்வர்கள், பெற்றோர்கள், முன்னாள்–இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி) 2020–2021–ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை நிறைவு செய்த

# மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா




திருச்சி, மார்ச். 09 – ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி) 2020–2021–ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா (09.03.2024) சனிக்கிழமை அன்று இருவேறு நிகழ்வுகளாகக் கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடைபெற்றது. இதில் அரசு உதவிபெறும் பிரிவு மாணவர்களுக்கு காலை 10.00 மணிக்கும், சுயநிதி ஆண்கள் பிரிவு மாணவர்களுக்கு பிற்பகல் 02.00 மணிக்கும் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் இவ்விழாக்களில் தலைமையுரையாற்றினார். பல்கலைக்கழக தரவரிசையில் இடம்பெற்ற 8 இளங்கலை மற்றும் 2 முதுகலை மாணவர்கள் உட்பட 2039 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் அ.குணசேகரன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 797 மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். திருச்சி மாநகரில் தலைசிறந்த கல்வி நிறுவனமாகத் திகழும் ஜமால் முகமது கல்லூரி தேசிய அளவிலான தரமதிப்பீட்டில் வரலாற்றுத் தடங்களைப் பதித்து வருவதற்கு முக்கியக் காரணம் இக்கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்களிப்புதான் எனக் கூறி தனது உரையைத் துவக்கினார். உயர்கல்வி, மாணவர்களின் ஆளுமைத்திறன் மற்றும் சிந்தனைத்திறன்களை வளர்ப்பதோடு அவர்களின் சந்ததியினரையும் உயர்த்துகிறது. மேலும், மாணவர்கள் சிறப்பாகச் செயல்படும்பொழுது, தங்களது துறையில் தவிர்க்கமுடியாத ஆளுமைகளாக உயர்வர். வாழ்க்கையில் முன்னோக்கி வளர, சமூகம் எனும் பல்கலைக்கழகத்தின் வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தி, அன்பு மற்றும் கனிவு செலுத்தி, சகிப்புத்தன்மையுடன் செயல்பட வேண்டும் எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

பிற்பகலில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், ஜமால் முகமது கல்லூரியின் உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 1242 மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். அவர்தம் உரையில், ஜமால் முகமது கல்லூரி கடந்த 74 ஆண்டுகளாக தரமான கல்வியை ஏழை, எளியோருக்கு வழங்கி சேவையாற்றி வருகிறது எனக் கூறினார். மாணவர்களின் கல்வி பயணத்தில் பட்டம் பெறுதல் ஒரு மைல்கல், மேலும், தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் அடுத்த நிலைக்கு முன்னேறிச் செல்வதற்கான முறையான அங்கீகாரமாகும் என்றார். மாணவர்கள் தங்களுடைய இலக்கை அடைவதற்கான பயணத்தில் வெற்றிபெற, அனுபவங்களையும் வாய்ப்புகளையும் முழுமையாகப் பயன்படுத்துவதோடு நற்பண்புகளையும் கடைபிடிக்க வேண்டும் எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

இப்பட்டமளிப்பு விழாவில், கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஜெ. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மேலும், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம், கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் அ.இசாக் அஹமது, முனைவர் அ.ஜ.ஹாஜா மொகைதீன், செல்வி. அ. ஃபமிதா பானு, கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள்–இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# SCIENCE ACADEMIES' LECTURE WORKSHOP




Department of Mathematics, Jamal Mohamed College, Tiruchirappalli has organized the SCIENCE ACADEMIES' LECTURE WORKSHOP ON “Mathematical Biology” on 18.03.2024 & 19.03.2024 - INAUGURATION



Department of Commerce organised its valedictory function on 13-02-2024. The Chief Guest was Dr. A. ANVAR AHAMED, Assistant Professor & Head, PG Dept. of Commerce, Govt. Arts and Science College, Nagapattinam. He addressed the students on the theme “KEEP YOUR EYES UPON THE GOAL”.



The Vainu Bappu Astronomy Club of PG and Research Department of Physics, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli organised the Workshop on Observation of the Sun and understanding of our solar system through Telescopes in commemoration of Galileo's Birthday 15-02-2024



Thanneer Sutru Choolal Maanavar Mandram of Jamal Mohamed College, in commemoration of World Wildlife Day (March 03), organized a Special Lecture Program on “Conservation of Bio-Diversity for Sustainable Future” on 01st March 2024, at 11.00 a.m.



A Felicitation function was organised on 02.02.2024 by the Manaagment Committee members of Jamal Mohamed College to appreciate and felicitate the NCC cadet N.Shaheth Nisal of II year UG who participated in the state organised Republic Day Parade (MRDC) on 26.01.2024 at Chennai.

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
K. சண்முக வேலாயுதம்
M.A., M.Phil.,SET.,
துறைத் தலைவர் (காட்சித் தொடர்பியல் துறை)

இணை ஆசிரியர்கள்
D. பிரதீபன் M.Sc., SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

ஆசிரியர் குழு
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,

மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
T.M. கரண், R. வெற்றி கண்ணன்,

நிருபர்கள்
M. பாண்டியன், S. சுஜித்குமார் ,
R. அஸ்வந்த் கணேஷ் R.தீபக்குமார்

ஒளிப்படக் கலைஞர்கள்
K. அரவிந்த் குமார், A. வசந்த பிரியன்,
R.பாலசுப்ரமணியன், A. ரியாஸ்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

‘ஜமாலியன் டைம்ஸ்’ மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈமெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி)
2021–2022–ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை நிறைவு செய்த

# மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா




திருச்சி, மார்ச். 10– திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி) 2021–2022–ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா (10.03.2024) சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கும், சுயநிதி பெண்கள் பிரிவில் (2020–2021) மாணவிகளுக்கு பிற்பகல் 02.00 மணிக்கும் பட்டமளிப்பு விழா இருவேறு நிகழ்வுகளாக கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் இவ்விழாக்களில் தலைமையுரையாற்றினார். பல்கலைக்கழக தரவரிசையில் இடம்பெற்ற 24 இளங்கலை மற்றும் 17 முதுகலை மாணவிகள் உட்பட 2642 மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

காலையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மேனாள் பதிவாளர் மற்றும் தற்போதைய பொருளியல் துறைப் பேராசிரியர் முனைவர் எல்.கணேசன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 1274 மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். அவர்தம் உரையில், உயர்கல்வித்துறையில் ஜாதி, மத வேறுபாடின்றி ஒழுக்கத்துடன்கூடிய உயர்வான கல்வியை ஜமால் முகமது கல்லூரி வழங்கி வருகிறது. இச்சிறப்புமிகு கல்லூரியில் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்மை மற்றும் தாய்மை என்பது மிக உன்னதமானது. மேலும், பெண் என்பவள் தனக்காக மட்டுமின்றி தன் குடும்பத்திற்காகவும் தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் சமூகத்திற்காகவும் வாழக்கூடியவள். முன்னாள் ஜனாதிபதிகளான இராதாகிருஷ்ணன், டாக்டர் அ.ப.ஜெ.அப்துல்கலாம் மற்றும் முன்னாள் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா ஆகியோரின் உயர்சிந்தனைகளை எடுத்துக்கூறி, மாணவிகளின் கல்வி அடித்தட்டு மக்களுக்கும் பயன்படும் வகையில் இருக்க வேண்டும் என்றார். மேலும் பட்டம்பெறக்கூடிய பெண்கள் கருணை உள்ளத்தோடும் அன்புள்ளத்தோடும் இச்சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் எனக்கூறி தன் உரையை நிறைவு செய்தார்.

பிற்பகலில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், ஜமால் முகமது கல்லூரியின் பொருளாளர் ஹாஜி.எம்.ஜே. ஜமால் முஹம்மது, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 1368 மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். அவர்தம் உரையில், ஜமால் முகமது கல்லூரியின் வரலாற்றை நினைவு கூர்ந்து தன்னுடைய உரையைத் துவக்கினார். கல்லூரியின் வளர்ச்சியில் இந்நாள் மற்றும் முன்னாள் மாணவர்களின் பங்களிப்பு அளப்பரியது. கடந்த 25 ஆண்டுகளாகப் பெண்களுக்கான தரமான கல்வியை வழங்கி பெண்களின் வளர்ச்சிக்கு ஜமால் முகமது கல்லூரி மிகப்பெரும் பங்காற்றி வருகிறது. உலகில் எங்கு வசித்தாலும் தாங்கள் பயின்ற கல்லூரியை நினைவுகூர்ந்து அதன் வளர்ச்சியில் பங்கெடுக்க வேண்டும். தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது எனும் நபிமொழியைக்கூறி மாணவிகள் தங்களுடைய பெற்றோர்களை இரக்கத்துடனும் அன்புடனும் பேணிக் காக்க வேண்டும் என்றார். மேலும், பெண்களுக்கான உரிமைகளைப் பேணி, பெண்ணியத்தைப் பாதுகாப்பது ஒவ்வொரு ஆண் மகனின் கடமையாகும் எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

இப்பட்டமளிப்பு விழாவில், கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜீமுதீன், உதவிச்செயலாளர் முனைவர் கே.அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஜெ. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மேலும், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம், கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் அ.இசாக் அஹமது, முனைவர் அ.ஜ.ஹாஜா மொகைதீன், செல்வி. அ. ஃபமிதா பானு, கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள்–இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி)
2021–2022–ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை நிறைவு செய்த

# மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா




திருச்சி, மார்ச். 02 – ஜமால் முகமது கல்லூரியின் (தன்னாட்சி) 2021–2022–ஆம் கல்வியாண்டில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா (02.03.2024) சனிக்கிழமை அன்று இருவேறு நிகழ்வுகளாகக் கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடைபெற்றது. இதில் அரசு உதவிபெறும் பிரிவு மாணவர்களுக்கு காலை 10.00 மணிக்கும், சுயநிதி ஆண்கள் பிரிவு மாணவர்களுக்கு பிற்பகல் 02.00 மணிக்கும் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் இவ்விழாக்களில் தலைமையுரையாற்றினார். பல்கலைக்கழக தரவரிசையில் இடம்பெற்ற 7 இளங்கலை மற்றும் 7 முதுகலை மாணவர்கள் உட்பட 2029 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

காலையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், புதுச்சேரி பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர், பேரா. குர்மீட் சிங், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 868 மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். ஜமால் முகமது கல்லூரியின் எனது ஜமால்! எனது பெருமை! எனும் சொற்கள் தன்னை ஈர்த்ததாகக் கூறி விழாப் பேருரையைச் சிறப்பு விருந்தினர் தொடங்கினார். உலக அளவில் புகழ்பெற்ற இக்கல்லூரிக்கு வருகை புரிந்தது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது என்றார். வேற்றுமையில் ஒற்றுமை எனும் உயரிய கொள்கையைக் கொண்ட இந்தியத் திருநாட்டின் குடிமகன் என்பதில் ஒவ்வொரு பட்டதாரியும் பெருமிதம் கொள்ள வேண்டும். இந்தியா, சுதந்திரம் பெற்ற பின், கல்வி, தொழிற்துறை, சேவைத் துறை, உணவு உற்பத்தி, பால் உற்பத்தி மற்றும் மரபுசார் மருந்துகள் உற்பத்தியில் வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இதனால் இந்திய அளவிலும் உலக அளவிலும் ஏற்பட்டுள்ள வாய்ப்புகளை மாணவர்கள் தங்களின் வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். மேலும், மாணவர்கள் தங்களின் குடும்பம், தான் பயின்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் நாட்டிற்காகத் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் எனக் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

பிற்பகலில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், ஜமால் முகமது கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, 1161 மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி விழாப் பேருரையாற்றினார். பட்டம் பெறும் மாணவர்களை, ஜமால் முகமது கல்லூரியின் புனித பூமியில் பூத்த மலர்கள் என வாழ்த்தித் தனது உரையைத் துவங்கினார். கல்வி, உடல் மற்றும் மன வலிமையை அதிகப்படுத்துவதோடு, தங்களின் ஆளுமையை வளர்த்து, போட்டி நிறைந்த இவ்வுலகில் சமுதாயத்தை எதிர்கொள்ளும் திறனை வழங்குகிறது. இதனை மாணவர்கள் கல்லூரி காலங்களிலேயே பெறுகின்றனர். மேலும், கல்வி இல்லா வாழ்வு முழுமைபெறாது எனவும் கூறினார். அமைதியான மற்றும் வெற்றிகரமான வாழ்விற்கு கல்வியுடன் கூடிய சுயகட்டுப்பாடு மற்றும் அறம் முக்கியத்துவம் பெறுகிறது. கல்லூரி பெருமிதம் கொள்ளும் வகையில், மாணவர்கள் கல்லூரியின் தூதுவர்களாக உலகின் எப்பகுதிக்குச் சென்றாலும் ஒழுக்கம், நேர்மை மற்றும் கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

இப்பட்டமளிப்பு விழாவில், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர், முனைவர் கே. அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஜெ. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மேலும், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம், கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் அ.இசாக் அஹமது, முனைவர் அ.ஜ.ஹாஜா மொகைதீன், செல்வி. அ. ஃபமிதா பானு, கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள்–இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.
கலந்துகொண்டனர்.

# இலக்கிய விழாப் போட்டிகளில் வென்ற ஜமாலியன்ஸ்

ரூ.1,20,000/– மதிப்புள்ள ரொக்கப் பரிசு, பாராட்டு



தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறையும், பொது நூலக இயக்கமும் இணைந்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகம் சார்பாக, 17.02.2024 அன்று ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் பல்வேறு பொருண்மைகளில் மாணவ, மாணவிகளுக்கான போட்டிகளை 'இளையோர் இலக்கிய விழா'வாக நடத்தியது. இதற்கான பரிசளிப்பு விழா திருச்சிராப்பள்ளி புனித சிலுவைக் கல்லூரி வளாகத்தில் 23.02.2024 அன்று நடைபெற்றது.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளையும் சான்றிதழையும் வழங்கினார்.

இலக்கிய விழாப் போட்டிகளில் பங்கேற்ற ஜமால் முகமது கல்லூரி மாணவர்களுக்கு ரூ.1,20,000/– மதிப்புள்ள ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றிபெற்ற மாணவர்களை கல்லூரியின் செயலாளர் முனைவர் ஆ.கா.காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி.எம்.ஜே.ஜமால் முஹம்மது, துணைச் செயலர் முனைவர் க.அப்துஸ் சமது. நிர்வாகக்குழு கௌரவ இயக்குநர் முனைவர் கா.ந.அப்துல் காதர் நிஹால், கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முனைவர் து.இ.ஜார்ஜ் அமலரெத்தினம், நுண்கலைக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.சிராஜுதீன் மற்றும் பேராசிரியர்களான முனைவர் தீபா, திருமதி ஷர்மினா, திரு.அமீருதீன் ஆகியோர் மாணவர்களை வெகுவாகப் பாராட்டினர்.

சகோதரிகளே!
உங்கள் போட்டோக்களை
பேஸ்புக்கில் போடவேண்டாம்!
உங்கள் தலைகளை பலியாக்க
பல கும்பல்கள் காத்திருக்கின்றன.







அரபுத் துறை சார்பில் குரான் மற்றும் நபி மொழிகளில்

# அறிவியல் உண்மைகள் எனும் தலைப்பில் கண்காட்சி





திருச்சி,ஜன7– ஜமால் முகமது கல்லூரியின் அரபுத் துறை சார்பில் குரான் மற்றும் நபி மொழிகளில் அறிவியல் உண்மைகள் எனும் தலைப்பில் கண்காட்சி பிப்ரவரி 28 மற்றும் 29ம் தேதிகளில் கல்லூரியின் உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதனை கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் காஜா நஜீமுதீன் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு வாழ்த்தினார். கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது, துணைச் செயலாளர் டாக்டர் அப்துல் சமது, உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் அப்துல் காதர் நிஹால், கல்லூரி முதல்வர் டாக்டர் இஸ்மாயீல் முஹைதீன், துணை முதல்வர் ஜார்ஜ் அமலரத்தினம், மற்றும் அரபுத் துறைத் தலைவர் டாக்டர் முஹம்மது இஸ்மாயில் முன்னிலை வகித்தனர்.

திருச்சிராப்பள்ளி, சென்னை, தஞ்சாவூர், அம்மாபட்டினம், திருநெல்வேலி, மேல்விஷாரம், நாகர்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கண்காட்சியில்150 மாணவ,மாணவிகள் பங்கேற்றனர். கண்காட்சியில் 50 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

கண்காட்சி ஏற்பாடுகளை அரபுத்துறை தலைவர் முனைவர் முஹம்மது இஸ்மாயில், கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் அரபுத் துறை பேராசிரியர்கள் முனைவர் அப்துல் ரஷீத், முனைவர் ஷமீம் அன்சாரி, முனைவர் ஜாபர் சாதிக், முஹம்மது அபூபக்கர் சித்தீக், முஹம்மது அப்துல் ரஹீம், அரபுத் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செய்தனர். இக்கண்காட்சியை பல்வேறு துறை பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பார்வையிட்டனர்.

## நபிகள் நாயகத்தின் பிறப்பின் சிறப்பைக் கொண்டாடும்

# மீலாதுந்நபி விழா









திருச்சி, மார்ச், 05 – ஜமால் முகமது கல்லூரியில் நபிகள் நாயகத்தின் பிறப்பின் சிறப்பைக் கொண்டாடும் மீலாதுந்நபி விழா 05.03.2024 அன்று முற்பகலில் மாணவர்களுக்கும் பிற்பகலில் மாணவிகளுக்கும் கல்லூரிக் குளிர்மை அரங்கில் நடைபெற்றது. கல்லூரியின் மனித மேம்பாட்டு மையத்தின் மூலமாக நடத்தப்பட்ட இவ்விழாவில் கரூர் அரசு டவுன் ஹாஜி மற்றும் தாருல் உலூம் அரபிக் கல்லூரி நிறுவனர் மற்றும் முதல்வர் மௌலானா. அல்ஹாஃபிழ், அல்ஹாஜ், அமைதித்தூதுவர் F.சிராஜீத்தீன் அஹ்மது ரஷாதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாப் பேருரை ஆற்றினார்.

ஜமால் முகமது கல்லூரியின் நிறுவனர்களின் வள்ளல் தன்மையையும் உயர்ந்த நோக்கங்களையும் நினைவுகூர்ந்து மீலாதுந்நபி விழாவின் உரையினை சிறப்பு விருந்தினர் F. சிராஜீத்தீன் அஹ்மது ரஷாதி துவங்கினார். இறைவனின் இறுதித்தூதுவரான நபிகள் நாயகம் (ஸல்) நிற, இன பேதமின்றி அடிமைகளுக்கு ஆதரவளித்து அவர்களைத் தலைவர்களாக மாற்றினார். பெண் சிசுக்கொலையைத் தடுத்து பெண்களின் கண்ணியத்தை மேம்படுத்தினார். தனது அழகிய பண்புகளின் மூலமாக, விரோதிகள்கூட தன்னை ஆதரிக்கும் நிலையினை உருவாக்கினார். மனித குலத்தின் வாழ்வியல் நெறியை நபிகளார் தனது வாழ்க்கையின் மூலமாக மக்களுக்குக் கற்றுக்கொடுத்தார். மேலும், பெற்றோர்களின் கண்ணியத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும் எனக் கூறினார். ஆகவே, நபிகளாரின் வாழ்வு அனைவருக்குமான வாழ்வியல் நெறியாகும். ஆகவே, அனைத்து மாணவர்களும் நபிகளாரின் வாழ்வு மற்றும் பண்புகளைப் பின்பற்ற வேண்டும் எனக்கூறி சிறப்பு விருந்தினர் தனது உரையை நிறைவு செய்தார்.

முன்னதாக, விழாக்குழுத் துணைத்தலைவரும் மேலாண்மைத் துறையின் இயக்குநருமான முனைவர் K.சிவநேசன் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் ஞ.இஸ்மாயில் முகைதீன் தலைமையுரை ஆற்றினார்.

விழா பேருரைக்குப் பின்னர் தீனியாத் & அறக்கல்வித் துறைகள் சார்பில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு மற்றும் கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தீனியாத் & அறக்கல்வித் துறையின் ஒருங்கிணைப்பாளர்கள் அரபித் துறைத்தலைவர் முனைவர் A.முகமது இஸ்மாயில் மற்றும் விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் I.ஜோசப் ஆண்டனி ஜெரால்டு, பேராசிரியைகள் J.பாத்திமா பௌஜியா, Dr.S.ராஜேஸ்வரி, (பெண்கள் பிரிவு) ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்திருந்தனர்.

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச்செயலாளர் முனைவர் கே. அப்துஸ் சமது, கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் கே.என் முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குநர் செல்வி ஜெ. ஹாஜிரா ஃபாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மேலும், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம், கூடுதல் துணை முதல்வர்கள் முனைவர் அ.இசாக் அஹமது, முனைவர் அ.ஜ.ஹாஜா மொகைதீன், செல்வி. அ. ஃபமிதா பானு, கல்லூரியின் தேர்வு நெறியாளர், நிதி ஆளுநர், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மேனாள் முதல்வர்கள், பெற்றோர்கள், மேனாள், இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இறுதியாக, விழாக் குழுவின் செயலாளர் சமூகப்பணித் துறைப் பேராசிரியர் முனைவர் ஷேக் பஃரீத், நன்றியுரை ஆற்றினார்.

# JAMATICS 2024



திருச்சி,ஜன.11–திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி கணிதத் துறை சார்பாக 20.02.2024 அன்று தேசிய அளவிலான கல்லூரிகளு;கடு இடையிலான அறிவுதிறன் சார் போட்டிகள் JAMATICS 2024 நடைபெற்றது. Math Quiz, Connections, Math Modelling, Paper Presentation and Math Rangoli முதலிய ஐந்து போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுதீன் அவர்கள் மற்றும் பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை திண்டுக்கல் காந்திகிராம் கிராமிய பல்கலைக்கழக அணிக்கு வழங்கினர். சிவகாசி அய்யா நாடார் ஜானகி அம்மாள் கல்லூரிக்கு இரண்டாவது இடத்திற்கான பரிசு வழங்கப்பட்டது. செல்வி. ஜே. சுபா பிரபு, நிர்வாகி, ஜோசப் கண் மருத்துவமனை மற்றும் தலைவர், திருச்சிராப்பள்ளி பட்டர்பிளை ரோட்டரி சங்கம் அவர்கள் கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார். இவ்விழாவில் பல்வேறு கல்லூரிகளில் இருந்து 167 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## நவ நாகரீக நுட்பம் மற்றும் ஆடை அமைப்பியல் துறை சார்பாக

# ஆடை வடிவமைப்பாளர் போட்டி





நவ நாகரீக நுட்பம் மற்றும் ஆடை அமைப்பியல் துறை மாணவிகள் பங்கேற்று, பல்வேறு கருப்பொருள்கள் மற்றும் உத்வேகத்துடன் தங்கள் ஆடைகளை காட்சிப்படுத்தினர். இறுதிச் சுற்றில் சிறந்த வடிவமைப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு மாணவர்களுக்கு சிறந்த வடிவமைப்பாளர் மற்றும் வெற்றியாளர் கோப்பைகள் வழங்கப்பட்டன. பங்கேற்பாளர்கள் அனைவரும் பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## Department of English organised

# One Day National Conference



The Department of English, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli, organised, A One Day National Conference on the theme of "Liberating the Rhetorics: Changing Trends in English Language and Literature" on 15th February 2024. The inaugural session began at 10am with the prayer. Dr. A. Mohammed Mustafa, Associate Professor and Head of the Department welcomed the gathering. Followed by this, the presidential address was delivered by the Principal of Jamal Mohamed College Dr.S.Ismail Mohidheen. The Secretary and Correspondent of the college Dr. A.K.Khaja Nazeemuddeen and Treasurer Hajee. M. J.Jamal Mohamed felicitated the gathering and wished for the success of the conference. Dr.H. Jamesha Mohideen, Associate Professor of English elaborated the theme of the conference. Additional Vice - Principal and Member In Charge of the Department (SF-Women) Ms.A. Famitha Banu, introduced the Chief Guest. Dr.Shugufta Shaheen, Professor and Head, Department of English, Maulana Azad National Urdu University, Gachibowli, Hyderabad Telangana, delivered the keynote address of the conference. While addressing, Dr.Shugufta Shaheen highlighted the importance of changing the false narratives about women in general, Muslim women in particular, the necessity to uplift them from the cloud of ignominy with misconception and the need for setting the standards for future generation. Around 90 research papers were published in the e-journal Jamal Academic Research Journal-An Interdisciplinary (JARJ). Organising Secretary Dr. M. Mohamed Anwar, Associate Professor of English, delivered the Vote of Thanks for the Inaugural Function. After the inauguration, five parallel sessions were assigned to the participants. Overall 130 research papers on the theme of the conference were presented by the participants from the various colleges in Tamil Nadu and all over the country. The valedictory function started at evening 4 pm on the same day. Mr.S. Sheik Ismail, Associate Professor of English, welcome the gathering. The report of the conference was presented by Associate Professor of English Ms.M.G.Thajunnisha. The presidential address was delivered by the Vice-Principal of the college Dr.D.I.George Amalaretthinam. Mr. S. Akbar Ali, Assistant Professor of English introduced the chief guest of the function and alumni of the college Dr. C. Alagan, Associate Professor and Head of Department of English, Thiru.Vi.Ka.Govt. Arts College, Thiruvarur. While delivering the valedictory address, he insisted the importance of reading original text rather than running behind the secondary sources. He remembered his college days praising the former professors who inspired his professional as well as personal life. All the paper presenters received the appreciation certificates from the dignitaries. The Organising Secretary of the Conference Dr.Y. Parvas Sharif, Associate Professor of English delivered the Vote of Thanks in the Valediction. Directors, Deans, Additional Vice-Principals and Heads of the departments graced the occasion. About 800 faculty members, research scholars and students from the various institutions attended the conference.

## STUDENTS' CORNER

# DIGITAL ART






**A. NARENDIRAN**

**3rd Year B.Sc Visual Communication**